பயிற்சி, அரசுப் பணியாளர்களுக்குண்டான Group II, Group IV தேர்வுகளுக்கான குறுகிய காலப் பயிற்சி, நேர்முகத் தேர்விற்கான பயிற்சி வகுப்புகளும், பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைந்து B.Com., M.Com., M.C.A., ஆகிய படிப்புகளுக்கான பகுதிநேர பாடப் பிரிவுகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இம்மையத்தில் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு பட்டு நூல் மற்றும் ஜரிகை தரத்தினை ஆய்வு செய்தல், நெசவுப் பயிற்சி, சாயப் பயிற்சி, புதிய வடிவமைப்புப் பயிற்சி, embroidery பயிற்சி, கணினி designing மற்றும் drawing பயிற்சி, புடவைகளுக்கு கல் ஒட்டுதல் பயிற்சி ஆகிய பயிற்சிகளுக்கான புதிய பாடப் பிரிவுகளைத் துவக்கி, பயிற்றுவித்தால், ஆயிரக்கணக்கான இளைஞர்கள் அரசு மற்றும் தனியார் துறையில் வேலைவாய்ப்பு பெறுவதோடு, சுயதொழில் தொடங்கவும் வாய்ப்பு ஏற்படும். நெசவு சார்ந்த ஜவுளித் தொழிலும் ஏற்றம் பெறும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையைப் பெற்று, இந்தப் பயிற்சி மையத்திலே நெசவுத் தொழில்நுட்பம் சார்ந்த புதிய பாடப் பிரிவுகள் ஆரம்பிக்கப்படும் என்று சொன்னதற்காக எனது தொகுதி சார்ந்த நெசவாளர் பெருமக்கள், வாக்காளப் பெருமக்கள் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 143, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

143—

மின் உற்பத்தி நிலையம்

***8767—திருமதி பி. கீதா ஜீவன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாநகராட்சியில் குப்பையிலிருந்து மின் உற்பத்தி செய்யும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2017 ஜூலை 6]

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பூரண உடல் நலம் பெற்று வந்ததற்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பணி மாநகராட்சியின் வாயிலாகச் செய்யவேண்டிய பணியாகும். இருந்தாலும்கூட, மாநகராட்சியிலிருந்து குப்பைக் கழிவுகளைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிப்பதற்கு மின்சார வாரியத்தில் மனுக்கள் கொடுக்கப்பட்டால், அவை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.*

திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் எங்கும் குப்பை மேலாண்மை என்பது பெரும் பிரச்சினையாகத்தான் உள்ளது. குப்பையை மொத்தமாகச் சேகரித்து ஓரிடத்தில் குவித்து வைக்கும் வேலைதான் தமிழகம் எங்கிலும் நடைபெற்று வருகிறது. இது நமது எதிர்கால சந்ததியினரைப் பாதிக்கக்கூடிய ஒரு பிரச்சினையாகும். ஆகவே, அதற்கு உடனடியாகத் தீர்வு காணவேண்டிய நிலையில்தான் இருக்கிறோம் என்பதை நாம் அனைவரும் அறிவோம். கழகத் தலைவர் கலைஞர் ஆட்சியில் தூத்துக்குடி மாநகராட்சியில் மக்கும் குப்பை, மக்காத குப்பை என்று பிரிக்கப்பட்டு, மக்கும் குப்பையிலிருந்து உரம் தயாரிக்கப்பட்டு, மக்களுக்குக் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டது. அதேபோல, பிளாஸ்டிக் பைகளெல்லாம் சேகரிக்கப்பட்டு, சிமென்ட் ஆலைகளுக்குக் கொடுக்கப்பட்டு வந்தன. ஆனால், ஆட்சி மாற்றத்திற்குப்பின்* waste management *என்பது அப்படியே கிடப்பில் போடப்பட்டது. ஆகவே, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண போர்க்கால அடிப்படையில் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.* Pilot scheme–*ஆக, ஒரு முன்னோடித் திட்டமாக, முதற்கட்டமாக, இந்த அரசு தூத்துக்குடி மாநகராட்சியில் அதனைச் செய்து தரவேண்டுமென்று அரசை வலியுறுத்தி, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்பேடு பகுதியிலே இருக்கின்ற பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பாக காய்கறி கழிவுகளைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதை captive generation என்று சொல்லக்கூடிய வகையில், அவர்கள் சொந்தமாகப் பயன்படுத்திக் கொள்கின்றார்கள். அந்த வகையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் பொறுத்தவரையில், தூத்துக்குடி மாநகராட்சி அதற்கு முன்வருமென்று சொன்னால், மின்சார வாரியம் அதற்குத் தயாராக இருக்கிறது என்பது ஒரு விஷயம். ஏற்கெனவே மக்கும் குப்பை, மக்காத குப்பை திட்டம் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்டது என்று சொன்னார்கள். அந்தப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன. அதேபோல, பிளாஸ்டிக் கழிவுகளைப் பொறுத்தவரை இப்பொழுது, மாண்புமிகு முதல்வர் அவர்களால் ஆணையிடப்பட்டு, அந்தக் கழிவுகளைச் சேகரித்து, தார்ச் சாலை அமைக்கின்ற பணியும் நடைபெற்று வருகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.

திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பையைப் பிரிப்பதற்கு அரசு உத்தரவிட்டுள்ளது; நிதி ஒதுக்கப்படுகிறது என்பவையெல்லாம் இருக்கின்றன. ஆனால், அந்தப் பணியில் அவ்வளவு ஈடுபாட்டோடு அரசு அதிகாரிகள் செயல்படவில்லை. ஆகவே, அதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அரசுத் துறையைச் சார்ந்தவர்களும் நடவடிக்கை எடுக்கவேண்டும். தூத்துக்குடி மாநகராட்சியைப் பொறுத்தவரையில், waste management–க்கு என்று சுமார் 412 ஏக்கர் பரப்பளவில் இடம் இருக்கிறது. சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டுள்ளது; போதிய இடவசதி இருக்கிறது. ஆகவே, உள்ளாட்சித் துறையோடு இணைந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை ஒரு முன்னோடித் திட்டமாக, தூத்துக்குடியில் செயல்படுத்தவேண்டும். அங்கு குப்பை அளவு போதுமானதாக இல்லை என்றாலும்கூட, 40 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள திருநெல்வேலி மாநகராட்சி மற்றும் அருப்புக்கோட்டை நகராட்சிகளிலிருந்துகூட நாம் குப்பையை எடுத்து செய்யலாம். இதற்கு அரசு திட்டமிடவேண்டும். இதை முன்னோடித் திட்டமாகச் செய்துதர வேண்டும் என்று வலியுறுத்தி, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டத்திற்காக தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் ஒரு யூனிட்டிற்கு 6 ரூபாய் 16 பைசா என்று ஒரு விலையை நிர்ணயித்திருக்கின்றது. அதற்கு மின்சார வாரியமும் தயாராக இருக்கின்றது. இதுகுறித்து, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் சொல்லியிருக்கின்றேன். ஆகவே, அந்த நகராட்சியோ, மாநகராட்சியோ முன்வருமென்று சொன்னால், நாங்கள் அந்தப் பணியை எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கின்றோம். ஏனென்று சொன்னால், மற்றவர்களுக்கெல்லாம் உற்பத்தி செலவு குறைவு. ஆனால், மாநகராட்சி மற்றும் நகராட்சி குப்பையிலிருந்து எடுக்கின்ற மின்சாரத்தினுடைய உற்பத்தி செலவு அதிகமாகும் என்கின்ற காரணத்தினால் 6 ரூபாய் 16 பைசா என்ற விலையில் ஒரு யூனிட் மின்சாரத்திற்கு வழங்குவதற்கு மின்சார வாரியம் தயாராக இருக்கிறது.*

முற்பகல் 10–20

அதுமட்டுமல்ல, ஒரு சில நகராட்சிகளில் அவரவர்களே குப்பைகளிலிருந்து மின்சாரம் தயாரித்து, அந்தந்த நகராட்சிகளில் இருக்கிற street lights*–தெரு விளக்குகளை எரியவிட்டிருக்கின்றார்கள். அதுபோல, ஒரு முன்மாதிரியான திட்டத்தை நீங்கள் ஏற்படுத்துவீர்கள் என்றாலும், அதற்கும் அரசு தயாராக இருக்கின்றது. அதேபோல, திடக்கழிவு மேலாண்மையைப் பொறுத்தவரை, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் விவரம் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மாவின் அரசு 1,800 கோடி ரூபாய் அதற்கு ஒதுக்கியிருக்கின்றது. உங்கள் ஆட்சியில் 303 கோடி ரூபாய்தான் ஒதுக்கியிருந்தீர்கள். நான் குறையாகச் சொல்லவில்லை. ஆனால், தற்போது அந்தப் பணிகள் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள்.*

திரு. கே.பி.பி. சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதியில் இருக்கக்கூடிய பகுதிகளில் கடந்த ஒரு வார காலமாக இரவில்*

2 மணி நேரம், 3 மணி நேரம் மின்சாரம் தடைபட்டிருக்கின்றது. அங்கே மின்சார வாரிய அலுவலகங்களைப் பார்க்கக்கூடிய ADE/AE போன்ற அதிகாரிகளைக் கேட்கின்றபொழுது, திருவொற்றியூரில் அமையப்பெற்றிருக்கின்ற மின்மாற்றிகள் பழுதடைந்து, பழைய நிலையிலேயே இருக்கின்ற காரணத்தினால் அதுபோன்ற நிலை ஏற்படுகிறது என்று அவர்கள் கூறுகிறார்கள். அதுபோன்ற பழுதடைந்த மின்மாற்றிகளை உடனடியாக மாற்றித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாத கேள்வி என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் கேட்டது முக்கியமான கேள்விதான். சென்னையைப் பொறுத்தவரையில், நேற்று மட்டும் 3,200 மெகா வாட் அளவுக்கு மின்சாரத்தை பயன்படுத்தியிருக்கிறார்கள். அப்படி மின்சாரத்தை பயன்படுத்தும்போது overload ஆக இருக்கின்றபோது ஒரு சில பழைய transformers பழுதடைந்துவிடுகின்றன. அவ்வாறு பழுதடைகின்றபோது வேறு ஒரு transformer–ஐ மாற்றிக் கொடுத்திருக்கிறோம். அதற்காக அரை மணிநேரம், ஒரு மணிநேரம் தாமதம் ஆகிவிடுகிறது. அதுகூட முன்னுரிமை அடிப்படையில்தான் சென்னையில் கொடுக்கப்படுகிறது. புதிய transformer வாங்குவது குறித்து உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து தடையாணை பெற்றிருக்கிறார்கள். அதனால் புதிய transformer வாங்கமுடியாமல் இருக்கிறது. இருந்தாலும் வேறு எந்தப் பகுதிகளில் இருக்கின்றதோ, அங்கிருந்து அதை சென்னை நகருக்குக் கொண்டுவந்து, முன்னுரிமை அடிப்படையில், பணிகளை மேற்கொண்டிருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற பகுதிகளிலிருந்து இரவு ஒரு மணி, இரண்டு மணிக்குக்கூட என்னை தொலைபேசியில் தொடர்புகொள்கின்றார்கள். உடனடியாக அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு, மின்மாற்றிகளைச் சரி செய்து அந்தந்தப் பகுதிகளுக்கு மின்சாரத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். கூடியவிரைவில் அந்தப் பணிகளை முடித்து, இனிமேல் தடையில்லாமல் மின்சாரம் வழங்குவோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.